கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna
Website: www.np.gov.lk e-mail: npplane@yahoo.com, npmoeplan@gmail.com

எனது இல. / මගේ අංකය / My No. NP/3/7/Circulars-15 உமது இல / ඔබේ අංකය / Your No. திகதி / දිනය / Date 10-08-2015

சுற்று நிருப இல: 07/2015

மாகாணக் கல்விப் பணிப்பாளர்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல கோட்டக் கல்வி அலுவலகர்கள்
சகல ஆசிரிய ஆலோசகர்கள்,
சகல அதிபர்கள்.

## ஒழுக்க விழுமியப் பண்புகளைப் பாடசாலைக் கல்வியினூடாக மேம்படுத்தல்

வடக்கு மாகாணத்திலே ஏற்பட்ட அனர்த்தங்களின் பின்னர், ஒழுக்க விழுமியக் கருத்துக்களைப் போதிக்கின்ற சமூகக் கட்டமைப்புச் சீர்குலைவின் பின்னணியில், தற்போதைய பாடசாலை மாணவர்கள் மத்தியில் குழு மோதல்கள், பாலியல் சிக்கல்கள், நெறிபிறழ்வான பல்வேறு நடத்தைப் பிரச்சினைகள் போன்றன மேலெழுந்து பாரிய சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளதை ஊடகங்கள் ஊடாகவும், பல்வேறு தரப்பினரது கருத்துக்கள் வாயிலாகவும் அறிய முடிகின்றது. ஒழுக்க விழுமியப் பண்புகள் அருகி வருவதற்கான சுட்டிகளாகவே, இவை வெளித்தள்ளி நிற்கின்றன.

எனவே, மீண்டும் பொருத்தமான சமூகக் கட்டமைப்பையும், மனிதப் பண்புகளையும் விருத்தி செய்து, நேரான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய வகையில் அந்தந்த சமூகத்திற்கு ஏற்றபடி சமூகமயமாகித் தன்னையும் சமூகத்தையும் நன்னிலைக்குக் கொண்டுவருதலே ஒவ்வொருவருடையதும் கடமையாகும். இந்நிலையை அடைவதற்காக ஒவ்வொருவரும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மற்றவருக்கு இடையூறாக அன்றித் தன்னையும் தன்னுடைய சமூகப் பின்னணிகளையும் ஏனையோர் போற்றத்தக்கவாறு பேணி வாழ்தலும், ஏனையவர்களின் கலாசார பின்னணிகளை அறிந்து மதித்து ஒன்றுபட்டு வாழுதலும் அவசியமாகும்.

அவ்வகையில், பாடசாலைகள் மாணவரிடத்தே, மனிதரை மனிதர் மதிக்கக்கூடிய நல்ல ஒழுக்க விழுமியப் பண்புகளை விருத்தி செய்து, பூரணத்துவம் மிக்க சமுதாயத்தை உருவாக்குவதற்கான சந்தர்ப்பங்களை அமைத்துக் கொடுத்தல் வேண்டும். ஒவ்வொரு பாடங்கள், செயற்றிட்டங்கள், மன்றச் செயற்பாடுகள் ஊடாக இவ்வாறான ஒழுக்க விழுமியப் பண்புகளைச் சகல ஆசிரியர்களும் வழங்க வேண்டியது அவசியமாகும்.

எனவே, பாடசாலைகளில் கீழே தரப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவான செயற்பாடுகளை உரிய முறைப்படி உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

ஒவ்வொரு தவணையிலும் ஏழு (07) விழுமியக் கருத்துக்கள் என்றவாறு கீழே தரப்பட்டுள்ள அட்டவணையின் அடிப்படையில், அவற்றை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட நாடகம், தெருநாடகம், அரங்கச் செயற்பாடுகள், பேச்சு, கவிதை, பாடல், சித்திரம், நடனம், விவரணம், பத்திரிகைத் துணுக்குகள், கதைப்படங்கள், குறுந்திரைப்படம் போன்றவற்றை முன்வைத்துச் சிந்தனைக் கிளறலை ஏற்படுத்திக் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல் மிகவும் அத்தியாவசியமாகும்.

| **ஒழுக்க விழுமியங்கள்** | **செயற்படுத்தும் காலம்** |
|---|---|
| • உண்மை பேசுதல்<br>• நான் பெறுமதியானவன்/ள்<br>• மரியாதை செய்வோம்<br>• வணக்கம் செலுத்துவோம்<br>• பிரச்சினை தீர்ப்போம்<br>• அன்பு செய்வோம்<br>• விட்டுக் கொடுப்போம் | **முதலாந் தவணை** |
| • மற்றவர் சொல்வதைப் கவனமாகக் கேட்போம்.<br>• மன்னிப்புக் கேட்போம்; மீண்டும் செய்யாதிருப்போம்<br>• இதயபூர்வமாக நன்றி கூறுவோம்<br>• நன்றியுள்ளவராக இருப்போம்.<br>• பிறர் நலன் கருதிப் பிரார்த்தனை செய்வோம்.<br>• பொறுப்பளிக்கப்பட்ட பணியைச் செய்து முடிப்போம்<br>• வேலைகளின் தீவரம் கருதி முன்னுரிமைப்படுத்துவோம். | **இரண்டாந் தவணை** |
| • ஒரு நேரத்தில் ஒரு வேலையைச் செய்வோம்<br>• பழிவாங்காதிருப்போம்.<br>• நேரத்தை மதிப்போம்<br>• அணியாகச் செயற்படுவோம்<br>• பொறுப்புணர்வுடன் நடப்போம்.<br>• சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருப்போம்.<br>• சூழலை நேசிப்போம்.(பறவைகள், தாவரங்கள், மிருகங்கள் ...) | **மூன்றாந் தவணை** |

இ.இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்

இ.இரவீந்திரன்
செயலாளர்,

பிரதிகள்:

1. மாண்புமிகு. முதலமைச்சர்,
   வடக்கு மாகாணம்.
2. கௌரவ. கல்வி அமைச்சர்,
   வடக்கு மாகாணம்.
3. பிரதம செயலாளர்,
   வடக்கு மாகாணம்.



செயலாளர் / ලේකම් / Secretary 021-2219259
அலுவலகம் / කාර්යාලය / Office 021-3202704 (Admn.) 021-3202568 (Dev.) 021-3202281 (Plan.) 021-3202309 (Acct.) 021-7390665 (DSW)
தொலைநகலி / ෆැක්ස් / Fax 021-2220794